கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்:24.02.2025. அ.வ.எண் . 276/2018. வா.சா.1 . காளை பழனியப்பன், த/பெ, காளையப்ப செட்டியார்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

1) அ.வ.எண். 467/2016 வழக்கு குறித்து இந்த தாவாவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், அந்த வழக்கு வேறு,இந்த வழக்கு வேறு,,இடைக்கால உறுத்துக்கட்டளை பெற்ற போதாவது அந்த வழக்கின் விவரங்களை இந்த தாவாவில் கூறினேனா என்றால் இல்லை. இந்த அசல் வழக்கும், அ,வ,எண்.467/2016 வழக்கும்நகராட்சிக்கு எதிராகத்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்,, இந்த தாவாவை சிவில் சட்ட நடைமுறைப்படி தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 0.51 செண்ட் நிலப்பரப்பில் பெட்ரோல் பங்க் வைத்துள்ளதற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2) தாவா சொத்து பொள்ளாச்சி நகராட்சி மற்றும் ஊத்துக்குளி பஞ்சாயத்திற்கும் இடையில் அமைந்துள்ளது என்றால் பொள்ளாச்சி நகராட்சியின் இறுதி எல்லையில் அமைந்துள்ளது. ஊத்துக்குளி பஞ்சாயத்திற்கும் தாவா சொத்திற்கும் எவ்வளவு இடைவெளி என்றால் தெரியாது,, ஊத்துக்குளி பஞ்சாயத்திற்கும் தாவா சொத்திற்கும் எவ்வளவு இடைவெளி உள்ளது குறித்து என்னுடைய தாவா சொத்து விவரத்திலோ முதல் விசாரணையிலோ குறிப்பிடவில்லை என்றால் 4 எல்லையில் வருகிறது. தாவா சொத்திற்கும் ஊத்துக்குளி பஞ்சாயத்திற்கும் இ,டையில் 10 அடியில் பாதை செல்கிறது என்றால் சரியல்ல.

ஒப்பம்/- ( R. சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.

பொள்ளாச்சி

3) தாவா சொத்திற்கும் ஊத்துக்குளி பஞ்சாயத்திற்கும் இடையில் உயர் மின் அழுத்தம் கொண்ட கோபுரங்கள் அமைத்து மின் கம்பங்கள் உள்ளன என்றால் சரிதான், அந்த மின் பாதை தென்வடல் பாதை என்றால் சரிதான், வடக்கேயிருந்து தெற்காக நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் சென்று முடிவடைகிறது என்றால் நகராட்சி இடத்தையும் தாண்டி செல்கிறது. கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ளது என்றால் அது என்ன என்று எனக்கு தெரியாது. எனது பூமியை ஒட்டி தென்புறத்தில் அமைந்துள்ள கட்டிடம் என்ன பயன்பாட்டிற்காக உள்ளது என்பதை தெரிந்துகொண்டேனா என்றால் என்ன கட்டிடம்என்று தெரியாது ஆனால் அதற்கான உபகரணங்கள் எடுத்துசெல்வதற்காக என்னிடம் அனுமதி பெற்றுக்கொண்டு அந்த பாதையின் வழியாக எடுத்துச் சென்றார்கள்., என்ன தேவைக்காக மேற்படி அனுமதி கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

4) நகராட்சிக்கு சொந்தமான 10 அடி தென்வடல் பாதையில் தான் சென்றது என்றால் சரியல்ல. என் இடத்தின் வழியாக சென்று செங்கல், மணல் கொட்டி கொள்வதாக கூறியதின் பேரில் நான் அனுமதித்தேன். பின்னிட்டாவது நான் பிரதிவாதி என்ன செய்கிறார் என்பதை தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. என்னுடைய இடத்திற்கு வடபுறமாக சாலையைத் தாண்டி ஒரு புறம்போக்கு ஓடை உள்ளது என்றால் தெரியாது. எனது தோட்டத்தை ஒட்டி கிழபுறமாக எம் பி எஸ் என்பவரின் தோட்டம் உள்ளது என்றால் சரிதான். எம் பி எஸ் தோட்டத்தை தாண்டி ஒரு ஓடை வருகிறது அது எனது தோட்டத்தை தாண்டி தெற்கே

ஒப்பம்/- ( R. சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

செல்கிறது. தெற்கே சென்று அரசுக்கு சொந்தமான ஓடை உள்ளது என்றால் அந்த இடத்தில் தான் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடம் உள்ளது.

5) வழக்குச்சொத்திற்கு மேல்புறத்தில் 10 அடி பாதை இருந்தது அதைத்தான் பிரதிவாதி ஆண்டு அனுபவித்து வந்தார்கள் என்று அவருடைய எதிர் வழக்குரையில் கூறியுள்ளார்கள் என்றால் சரியல்ல. அந்த 10 அடி பாதையில் தான் பைப் லைன் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான் அதற்கு தான் உறுத்துக்கட்டளை பெற்றுள்ளோம். 10 அடி பாதை நகராட்சிக்கு பாத்தியப்பட்டதால் அதில் யார் வேண்டுமென்றாலும் போகலாம் வரலாம் அதில் அத்துமீறுதல் என்பது இல்லை என்றால் சரியல்ல. இதே சங்கதிகளை தான் அ,வ, எண். 467/2016 வழக்கிலும் இந்த பிரதிவாதிகள் கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். நான் சொல்லும் வடபுறத்தில் தான் காலை எண்.101/2 உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6) 10 அடி பாதையில் தான் பாதாள சாக்கடைக்கு தமிழக அரசால் ரூ. 100 கோடி ஒதுக்கப்பட்டு பணி நடந்து வந்தது என்பதை நான் தெரிந்து கொண்டேனா என்றால் எனக்கு தெரியாது. சதவீதம் மேற்படி பாதாள சாக்கடை பணி முடிவடைந்து விட்ட விபரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. அந்த பாதை வடுகபாளையம் மற்றும் பொன் நகர் ஏரியாக்களிலிருந்து என் பூமியை ஒட்டி நகராட்சி சுத்திகரிப்பு நிலையத்திற்கு வருகிறது என்றால் இல்லை. மேற்படி திட்டமானது அந்த இடத்தில் இருந்து விவசாய நிலங்களுக்கு சுத்திகரிப்பு செய்யப்பட்டு நன்னீராக கொண்டு செல்லப்படுகிறது என்றால் எனக்கு

ஒப்பம்/- ( R. சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.

பொள்ளாச்சி

தெரியாது. குட்டை எனது நிலத்திற்கு எந்த பகுதியில் அமைந்துள்ளது என்றால் எனக்கு தெரியாது,

7) சர்வேஎண். 2433 என்ற காலை எங்கு அமைந்துள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது., நகராட்சி கட்டிடம் கட்டிக்கொண்டிருந்த இடம் தான் குட்டை என்றால் சரிதான். அந்த குட்டை தான் பழைய சர்வேஎண். 2433 அந்த இடத்தில் தென்வடலாக 10 அடி பாதை மேற்படி ஆவணங்களில் உள்ளது என்றும், அது எனக்கு தெரியாது என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சர்வேஎண். 101 என்பது தான் குட்டை என்பதை நான் தெரிந்துகொண்டேனா என்றால் ஞாபகமில்லை. எனது ஏ அட்டவணை சொத்தின் மேல்புறத்தில் தான் ஜமீன் ஊத்துக்குளி பஞ்சாயத்தின் எல்லை ஆரம்பிக்கிறது என்றால் சரிதான்., ஏ அட்டவணை சொத்திற்கும் ஜமீன் ஊத்துக்குளி பஞ்சாயத்திற்கும் இடைப்பட்ட 10 அடி பாதையில் தான் பைப் லைன் செல்கிறது என்றால் தெரியவில்லை. அதில் தான் பைப் லைன் அமைக்கப்பட்டுள்ளது என்றால் என்னுடைய இடத்தில் தான் பைப் லைன் அமைக்கப்பட்டுள்ளது.

8) நான் அ.வ.எண். 4672016 வழக்கு போட்ட சமயத்திலேயே பைப் லைன் போட்டு முடிக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு தான்

ஒப்பம்/- ( R. சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி

பாதாள சாக்கடை பணிக்கு நெருக்கடி கொடுத்தேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பார்வையிடுவதற்கு நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய மனு தாக்கல் செய்தேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அவ்வாறு நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்தால் உண்மை நிலவரம் தெரிந்துவிடும் என்பதால் நான் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சட்டப்படி போடப்பட்ட பாதாளச்சாக்கடை பணியை நான் தடுத்து நிறுத்தியதால் தான் பிரதிவாதிகள் காவல் நிலையத்தை நாடினார்கள் என்றும் அதனால் பிரதிவாதிகள் எவ்வித அத்துமீறலும் தாவா சொத்தில் செய்யவில்லை என்றால் சரியல்ல. அப்போதே பிரதிவாதி தரப்பில் பணி முடிக்கப்பட்டுவிட்டதுஎ ன்றால் சரியல்ல. சுத்திகரிப்பு நிலையத்திற்கும் பாதாள சாக்கடை பைப்பிற்கும் இணைப்பு மட்டும் தான் நிலுவையில் இருந்தது என்றால் சரியல்ல. அதே போல் எனது பிராது ,பிரமாண வாக்குமூலத்தில் பி அட்டவணை சொத்துக்களில் 6 அடி ஆழம்,. 4 அடி அகலத்தில் 270 அடி நீளமுள்ள பள்ளம் தோண்டி நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்று கூறியிருப்பது பொய் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு சம்மந்தப்பட்ட சொத்து என்பதால் அதில் அத்துமீறல் என்பது கிடையாது எ ன்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பது எனக்கு நன்கு தெரிந்த பிறகு தான் இறுதிகட்ட நிலையில் வேலையை நான் தடுத்து நிறுத்தினேன் என்றா' சரியல்ல. 10 அடி பைப் லைன் போடப்பட்ட விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றும் அதனால் தனிப்பட்ட முறையில் அறிவிப்பு

ஒப்பம்/- ( R. சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.

பொள்ளாச்சி

கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

9) எனது பிராதிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ள சங்கதிகளை இந்த பிரதிவாதி மறுக்கிறார் என்றும் ஆதாயம் பெற வேண்டி மேற்படி பாதாள சாக்கடை திட்டத்தை நான் தடுத்து நிறுத்திவிட்டேன் என்றால் சரியல்ல,, பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 10 அடி இடத்தில் தான் குழாய் பதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதுஅல்ல என்றால் சரியல்ல.

ஒப்பம்/- ( R. சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.
பொள்ளாச்சி